# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1703/45 - 2011 අප්‍රේල් 29 වැනි සිකුරාදා - 2011.04.29

1703/45 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்

*3 (2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் விடயங்களுக்குப் பொறுப்புச்சாட்டப்பட்ட அமைச்சருடன் கலந்துரையாடி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ரோஹண ராஜபக்ஷ ஆகிய நான், இந்த அறிவிப்பின் மூலம் –

(1) நிர்மாணித்துச் செயற்படுத்திக் கையளிக்கும் (BOT) அடிப்படையில் கொழும்புத் துறைமுகத்தை விசாலமாக்கும் கருத்திட்டத்தின் கீழ் தெற்குக் கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்டத்தை செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் என இனங்காண்பதற்காக, வரையறுக்கப்பட்ட சைனா மேர்ச்சன்ட் ஹோல்டிங்க்ஸ் (இன்டர்நெஷனல்) கம்பனி, ஏட்கன் ஸ்பென்ஸ் பிஎல்சி குழுமம் மற்றும் இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை இக்கருத்திட்டத்தின் பங்குதாரர்களாவர். வரையறுக்கப்பட்ட கொழும்பு இன்டர்நெஷனல் கண்டேனர் டெர்மினல்ஸ் கருத்திட்டக் கம்பனியாகச் செயற்படும். இக்கருத்திட்டத்தின் மொத்த முதலீடு சுமார் 466.3 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருப்பதோடு அத்தகைய கருத்திட்டம் தேசிய நலனுக்கானதும் நாட்டுக்குப் பொருளாதார மற்றும் சமூக நன்மைகளை ஈட்டித்தருவதாகவும் இருக்கும் ;

(2) நிர்மாணித்துச் செயற்படுத்திக் கையளிப்பது தொடர்பான ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியை மேற்படி கருத்திட்டத்தின் ஆரம்ப திகதியாகப் பிரகடனப்படுத்துவதற்காக ; அத்துடன்

(3) மேற்சொல்லப்பட்ட கருத்திட்டத்தின் நோக்கங்களுக்காக, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் நியதிகளின்படி இக்கருத்திட்டக் கம்பனிக்கு அல்லது கருத்திட்டக் கம்பனியால் அனுமதிக்கப்பட்ட உப ஒப்பந்தக்காரர்களுக்கு இவ்வறிவித்தலில் தரப்பட்டுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான விலக்களிப்புக்கள் ஏற்புடைத்தாகும் எனக் குறிப்பிடுவதற்காகவும்.

**அட்டவணை**

(அ) ***2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க தேசிய இறைவரிச் சட்டம்*** :

– கம்பனி வரி விதிப்பனவுக்கான இலாபத்தை ஈட்டும் முதல் ஆண்டு அல்லது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்த இரண்டு (02) வருடங்களின் பின்னால், அவற்றுள் எது முந்தி வருகிறதோ, அந்த ஆண்டு தொடக்கம் இருபத்தைந்து (25) வருடங்களுக்கு நிறுவக வருமான வரி விலக்களிப்பு வழங்கப்படும். ஐயப்பாட்டைத் தவிர்ப்பதற்காக, மேலே விளக்கப்பட்ட இருபத்தைந்து (25) ஆண்டுகளின் முடிவின் பின்னர் அக்காலப்பகுதியில் அமுலில் இருக்கும் பொதுவான வரிச் சட்டகம் கம்பனிக்கு ஏற்புடைத்தாகும். மூலதனச் செலவுக்காகப் பெறப்பட வெளிநாட்டு கடன் மீதான வட்டி மற்றும் கருத்திட்டத்தில் சேவைக்கமர்த்தப்பட்டுள்ள உசாத்துணையாளர்களுக்குச் செலுத்தப்பட்ட தொழில்நுட்பக் கட்டணம் ஆகியவை தொடர்பாக கருத்திட்டத்தை அமுலாக்கும் கம்பனிக்கு தடுத்து வைக்கும் வரி விலக்களிப்பு வழங்கப்படும் ;

*– இலாபங்களில் இருந்து பங்குதாரர்களுக்கு விநியோகிக்கப்படும் பங்கு இலாபங்கள் மீதான வரி சொல்லப்பட்ட இருபத்தைந்து (25) வருட வரி விலக்களிப்புக் காலப்பகுதியில் மற்றும் அதனைத் தொடர்ந்து ஒரு வருட (01) காலப்பகுதிக்கு வருமான வரியில் இருந்து விலக்களிக்கப்படும் ;*

*– கருத்திட்டக் கம்பனியின் ஆகக்கூடிய எண்ணிக்கையான இருபது (20) வெளிநாட்டு ஊழியர்களுக்கு உ. நீ. செ. வ. இல் இருந்து ஐந்து வருட (05) வரி விலக்களிப்பு எற்புடைத்தாகும்.*

(ஆ) **2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர்பெறுமதி வரிச் சட்டம் ;**

*ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட திகதியில் இருந்து கருத்திட்டத்தின் செயற்பாட்டு/நிர்மாணக் காலகட்டம் அல்லது ஐந்து (05) வருடங்களுக்கு, அவற்றுள் எது குறைவாக உள்ளதோ அக்காலகட்டத்தில் கருத்திட்டம் தொடர்பான பொருட்களின் இறக்குமதி மற்றும் கருத்திட்டம் சம்பந்தப்பட்ட பொருட்களின் உள்நாட்டுக் கொள்வனவுகள் மற்றும் சேவைகள் மீது சேர்பெறுமதி வரி செலுத்தல் பிற்போடப்படும் சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் உட்பிரிவு (1) இன் பந்திகள் (ஆ) மற்றும் (இ) ஆகியவற்றின் எற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட சேவைகள் உட்படும் பட்சம் சேர்பெறுமதி வரி செலுத்தல் பூஜ்ய வீதமாக்கப்படும். பூஜ்ய வீதத்துக்குட்படுத்தப்பட்ட சேவைகளை விடுத்து வேறு ஏதும் சேவைகள் மீது பொதுவான சேர்பெறுமதி வரி செலுத்தல் ஏற்புடைத்தாகும்.*

(இ) **2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி விதிப்பனவுச் சட்டம் :**

*கருத்திட்டத்தின் செயற்பாட்டு/நிர்மாணக் கட்டத்தின் போது ஏற்புடைத்தாகாது.*

(ஈ) **2011 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டம் :**

*நிர்மாணித்து செயற்படுத்திக் கைமாற்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளவாறு கருத்திட்டத்தின் அமுலாக்க/நிர்மாண ஆரம்பத்தின் பயனுறு திகதியில் இருந்து அமுலுக்குவரும்படியாக மொத்தம் ஏழு (07) வருடக் காலப்பகுதியொன்றுக்கு ஏற்றுடைத்தாகாது.*

(உ) **2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம் :**

*கருத்திட்டத்தின் செயற்பாட்டு/நிர்மாணக் கட்டத்தின் போது கட்டிடக் கைத்தொழில் உத்தரவாத நிதிய விதிப்பனவைச் செலுத்துவது ஏற்புடைத்தாகாது ;*

(ஊ) **(235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டம் :**

*– எதிர்மறை பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைத் தவிர கருத்திட்டத்தின் தேவைக்காகப் பிரத்தியேகமாக கருத்திட்டத்தைச் செயற்படுத்தும் கம்பனியின் பெயரில் இறக்குமதி செய்யப்படும் சகல மூலதனப் பொருட்கள் தொடர்பிலும் சுங்கக் கட்டண விலக்களிப்பு ஏற்புடைத்தாகும் ஆயினும், அத்தகைய பொருட்கள் அளவிலும் தரத்திலும் உள்நாட்டுச் சந்தையில் கிடைக்காத பட்சம் எதிர்மறை பட்டியலில் உள்ள பொருட்கள் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.*

*பசில் ரோஹண ராஜபக்ஷ, பா. உ.,*
*பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.*

கொழும்பு,
*2011, ஏப்பிறல் 30.*

*5 -344*